பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
07 11 2024 6 30

வியாழக்கிழமை மாலை

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் மின்னணு கட்டமைப்பு மற்றும் தொழில்துறை மிகப்பெரிய அளவில் வளர்ச்சி கண்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

2. ஒரு பதவி – ஒரு ஓய்வூதிய திட்டம் முன்னாள் ராணுவத்தினர் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு பேருதவியாக அமைந்துள்ளது என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் விவசாயிகளுக்கு போதிய அளவில் பயிர்க்கடன் மற்றும் உரங்கள் வழங்க மாநில அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

4. கந்தசஷ்டி விழாவின் முக்கிய நிகழ்வான சூரசம்ஹாரம் இன்று நடைபெற்றது.

5. இத்தாலி சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Ria Bhatia** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

நாட்டின் மின்னணு கட்டமைப்பு, தொழில்கள், உள்கட்டமைப்பு மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையில் பெரிய அளவில் வளர்ச்சி கண்டுள்ளதாக வெளியுறவுத்துறை டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் பயணம் மேற்கொண்டுள்ள அவர், சிட்னி நகரில் தொழில் அதிபர்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகளுடன் நடைபெற்ற

கூட்டத்தில் உரையாற்றுகையில் இந்தியா – ஆஸ்திரேலியா இடையே ஒட்டுமொத்த ஒத்துழைப்பு நடவடிக்கைகளில் தொழில்கள் முதலீடுகளுக்கான வாய்ப்புகள் பெருமளவில் உள்ளதாக குறிப்பிட்டார்.

திரு. ஜெய்சங்கர் தமது ஆஸ்திரேலிய பயணத்தின்போது இந்திய வம்சாவளியினர் மற்றும் நியூசவுத்வேல்ஸ் மாகாண மன்ற உறுப்பினர்களையும், சிட்னி நகரில் சந்தித்துப் பேசினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புக்கு அங்குள்ள இந்திய வம்சாவளியினர் அளித்து வரும் ஒத்துழைப்புக்கும் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் நன்றி தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் விவசாயிகளுக்கு போதிய அளவி பயிர்க்கடன் மற்றும் உரங்கள் வழங்க மாநில அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அந்தந்த பருவ காலங்களில் விவசாயிகள் பயிர் சாகுபடி செய்ய ஏதுவாக மாநில தொழில்நுட்பக் குழு அங்கீகரித்துள்ள அளவுக்கு கடனுதவி வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் மாநில தொழில்நுட்பக் குழு மற்றும் நபார்டு, ஆர்.பி.ஐ. வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு கடனுதவி வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

நடப்பாண்டில் 18 லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு 15 ஆயிரம் கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

77 ஆயிரம் டன் யூரியா, 41 ஆயிரம் டி.ஏ.பி. 18 ஆயிரம் டன் எம்.ஓ.பி மற்றும் 70 ஆயிரம் டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

மாநிலத்தில் உள்ள 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகள் சிறு குறு வியாபாரிகள் மற்றும் பொதுமக்களுக்குத் தேவையான பயிர்க்கடன், நகைக்கடன், சுயஉதவிக் குழு கடன் என 26 வகையான கடன்கள் குறைந்த வட்டி விகிதத்தில் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பயிர்க்கடன்களை விவசாயிகள் தங்கள் வீட்டிலிருந்தே பெற ஏதுவாக ஆன்லைன் செல்ஃபோன் செயலி பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

குறித்த காலத்தில் பயிர்க்கடன்களை திருப்பி செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டி வசூலிக்கப்படுவதில்லை என்றும், அதனை அரசே ஏற்றுக்கொள்வதாகவும் மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஒரு பதவி – ஒரு ஓய்வூதிய திட்டம் முன்னாள் ராணுவத்தினர் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு பேருதவியாக அமைந்துள்ளது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு மேற்கொண்ட இந்த நடவடிக்கை கடந்த 10 வருடங்களில் முன்னாள் ராணுவத்தினருக்கான அதிகாரத்தை வலுப்படுத்தியிருப்பதாகத் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் போதிய அளவில் மருந்துகள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் இன்னுயிர் காப்போம் திட்டத்தின்கீழ் சிகிச்சை பெற்று வரும் 3 லட்சமாவது பயனாளியை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநில அரசு மேற்கொண்ட நடவடிக்கையால் டெங்கு பாதிப்பால் ஏற்படும் இழப்பு 8ஆக குறைந்துள்ளதாக தெரிவித்தார்.

மருத்துவத்துறையில் கடந்த 3 ஆண்டுகளில் 18 ஆயிரத்து 600 பணியிடங்கள் நிரப்பப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தேசிய நலவாழ்வு குழுமத்தின் சார்பில் 4 ஆயிரத்து 800க்கும் மேற்பட்ட செவிலியருக்கும், 2 ஆயிரத்து 400க்கும் மேற்பட்ட சுகாதார ஆய்வாளர்களுக்கும் பணிகள் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

மாவட்ட நலவாழ்வு சங்கம் சார்பாக 2 ஆயிரத்து 300 செவிலியர்கள் உட்பட மொத்தம் 18 ஆயிரத்து 460 செவிலியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

அனைத்து அரசு மருத்துவமனைகளும் போதிய அளவில் மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களைக் கொண்டு நல்ல முறையில் செயல்பட்டு வருவதாகவும் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மத்திய அரசு கொண்டுவந்துள்ள புதிய கல்விக் கொள்கையை தமிழகத்தில் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என்று பிஜேபி மாநில துணைத் தலைவர் திரு. கேபி. ராமலிங்கம் வலியுறுத்தியுள்ளார்.

தருமபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் வளமான, திறமையான இளைஞர்களை உருவாக்குவதற்கு புதிய கல்விக் கொள்கை வழிவகுப்பதாக தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் திறமையான, ஊழலற்ற ஆட்சி அமைய வேண்டும் என்பதில் பிஜேபி உறுதியுடன் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் மததிய அரசு சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும், பல்வேறு தரப்பினரும் அவரைப் பாராட்டி வருவதாகவும் அவர் கூறினார்.

<<<<>>>>

கந்தசஷ்டி விழாவின் ஒரு பகுதியாக தமிழகம் முழுவதும்  முருகன் கோவில்களில் சூரசம்ஹாரம் இன்று நடைபெற்றது.

திருச்செந்தூர் முருகன் கோவிலில் சூரசம்ஹார நிகழ்ச்சி வெகுவிமரிசையாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

நாகூரில் நடைபெறும் கந்தூரி விழாவை முன்னிட்டு எர்ணாகுளம் - வேளாங்கன்னி எக்ஸ்பிரஸ் ரயில் இம்மாதம் 9ஆம் தேதி தொடங்கி 17ஆம் தேதி வரை ஒருவார காலத்திற்கு முத்துப்பேட்டை ரயில் நிலையத்தில் இரு மார்க்கத்திலும், நின்று செல்லும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

பயணிகளின் வசதிக்காக தற்காலிமாக ஒரு நிமிடம் இந்த ரயில் முத்துப்பேட்டையில் நிற்கும் என்று தெற்கு ரயில்வேயின் செய்திக்குறிப்பில்  தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழக கடலோர மாவட்டங்களில் அனேக இடங்களிலும், உள் மாவட்டங்களில் ஒருசில இடங்களிலும் அடுத்த 2 நாட்களுக்கு மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

*மாவட்டச் செய்திகள்*

மதுரை மாவட்ட தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில் வங்கிக் கடன் உதவிகளை ஆட்சியர் திருமதி சங்கீதா வழங்கினார்.

-----------

கன்னியாகுமரி மாவட்டம் மூக்கரைக்கல் பகுதியில் சரிசெய்யப்பட்ட தரைப்பாலத்தினை ஆட்சியர் திருமதி அழகுமீனா இன்று ஆய்வு செய்தார்.

-----------

காஞ்சிபுரம் முத்தியால்பேட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு சுமார் 2 கோடி ரூபாய்க்கான கடனுதவிகளை உணவுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஜெ. ராதாகிருஷ்ணன் வழங்கினார்.

-----------

ராமேஸ்வரம் பாம்பன் புதிய தூக்கு ரயில் பாலத்தில் 90 கிலோ மீட்டர் வேகத்தில் ரயிலை இயக்கி இன்று சோதனை மேற்கொள்ளப்பட்டது.

-----------

*விளையாட்டுச் செய்திகள்*

இத்தாலி சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Ria Bhatia** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் எதிர்த்து விளையாட இருந்த செர்பியாவின் **Natalija,** காயம் காரணமாக வெளியேறியதை அடுத்து, **Ria Bhatia** காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

-------------

தமிழக அணிக்கு எதிரான ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று அசாம் அணி தனது முதல் இன்னிங்சில் ஆட்ட நேர இறுதியில் 3 விக்கெட் இழப்பிற்கு 176 ரன் எடுத்துள்ளது.

குவஹாத்தியில் நடைபெற்று வரும் இப்போட்டியில் தமிழக அணி முதல் இன்னிங்சில் 338 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

**<<<<The End>>>>**